# தூண்டில்




## தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை

கிளர்ச்சி தடுப்பு நடவடிக்கைகள் உளவியல் யுத்தம் பற்றி அநபாயன் எழுதியிருந்த கட்டுரை மிக உபயோகமானது. இதனைப்புரிந்து கொள்ளாமல் ஆமிக்காரர் இப்ப எங்களோடை நல்லமாதிரி எண்டு ஆக்கள் கதைக்கிறதை கண்டிருக்கிறேன். இது போன்ற பயன் தரும் விடயங்களை பிரசுரியுங்கள்.

*- அன்பு, லூசியம்*

## நல்ல வலைப் பதிவு

ஒரு பேப்பரில் யாழ்பாடி எழுதும் வலைப்பதிவுகள் - அறிமுகம் மிகவும் உபயோகமான தகவல்களைத் தாங்கி வருகின்றது.

அந்தவகையில் தமிழில் வலைப் பதிவில் தட்டச்சு செய்தவற்றையே வாசித்த எமக்கு அதை ஒலியாகவும் கேட்கக் கூடிய வகையில் வாரம் ஒரு பதிவைத் தருவது மிகவும் ஒரு சிறந்த அருமையான புதிய முயற்சி.

இம் முயற்சி தொடருமானால் தமிழ் இணையத்தை நிச்சயம் புதிய பரிமாணத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவர்களின் சேவை தொடர வாழ்த்துக்கள்.

நிமலப்பிரகாசன் தொடர்ந்தும் நல்ல பல விடயங்களை எமக்குத்தர வேண்டும் அத்துடன் இன்னும் மேன் மேலும் இத் துறையில் வளர எமது ஆசிகளும் பாராட்டுக்களும்.

இப்படிப்பட்டவர்களை இனங்காட்டுவதற்கு ஒரு பேப்பருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

*- கனியா*

## கழுதை தேய்ந்து கடடெறும்பானதா?

புலத்தில் வெளிவரும் பத்திரிகைகளில் ஒரு பேப்பரை வேறுபடுத்திக் கொண்டிருந்த பல பதிவுகள் இப்போது மெல்ல மெல்ல ஒரு பேப்பரில் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன.

நகைச்சுவை கலந்த அநுபவப் பதிவுகள், சமூக சம்பந்தமான விடயங்கள், தமிழனத் துரோகிகளைத் தோலுரிக்கும் செய்திகள், இளைய வர்களைக் கவர்ந்த ரீன் பக்கங்கள், போன்ற விடயங்களை இப்போது காணமுடிவதில்லையே.

அவற்றையும் இணைத்துக் கொண்டால் தான் ஒரு பேப்பர் வித்தியாசமான பேப்பராக மிளிர முடியும்

*- கலா. பரிஸ்*

## இது தான் நீதியா

வாரமிருமுறை கள்ளருந்தும் வாய்ப்பைத் தந்து கொண்டிருந்த ஒரு பேப்பர் காரர் மீண்டும் ஒரு முறை நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்கள்.

பழங்கள்ளைப் பிரசுரிக்காமல் என் போன்ற இலக்கிய ஆர்வலர்களைப் பட்டினி போட்டு விட்டார்கள். இது தகுமா? இது முறையா? இது தான் நீதியா

*- சிறீ*

## லரி விஜேரத்தினவின் 'அன்பில்' மயங்கியவர்கள்

கொக்கட்டிச்சோலையில் அப்பாவி பொதுமக்களை, தமிழ்மக்களை படுகொலை செய்த சம்பவத்தில் தொடர்புடைய சிங்கள இராணுவ அதிகாரி லரி விஜேரத்தின பருத்தித்துறைக்கு மாற்றலாகி வந்தபோது வேறு விதமான அணுகுமுறையைக் கையாண்டார்.

அவரது நோக்கத்தை புரிந்து கொள்ளமல் சிலர் அவருக்கு வால் பிடித்துக்கொண்டு திரிந்தார்கள்.

*- ரவி, சவுத்தோல்*

## ஜோனி பற்றிய குறிப்பு

எனது சிறுவயது நண்பன் லெப். கேணல் ஜோனி அவர்களினது நினைவுக் குறிப்பினை பிரசுரித் திருந்தமைக்கு மிக்க நன்றி.

நினைவெழுச்சி நாளில் அவரை தவறாது நினைந்து கொள்வேன் இம்முறை அவரது சிறப்பை நீங்களும் பிரசுரித்திருந்தீர்கள்.

எமது வாழ்நாளில் மறக்கமுடியாத அந்த வீரர்களின் வரலாற்றை பதிவு செய்யும் சிறி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- இளங்கோ, ஹரோ*

## வைத்தியமும் வந்தால் நன்று

அறிவியல் தகவல்களில் மிகவும் அரிய, அறியாத தகவல்களை ஒரு பேப்பர் ஊடாக மாசிலாமணி அவர்கள் எமக்குத் தருகிறார்கள். எங்கதான் இப்படி நல்ல பல தகவல்களைத் தேடிப்பிடிக்கிறாரோ தெரியவில்லை. அதற்குப் பாராட்டுக்கள்.

இத்தோடு நில்லாது வைத்திய துறை சம்பந்தமான தகவல்களையும் சேர்த்துத் தந்தால் அறிவியல் தகவல்கள் பகுதி இன்னும் மெருகேறி புதுப் பொலிவுடன் விளங்கும் என நினைக்கிறேன். தொடரட்டும் உங்கள் பணி.

*- சியாமா*

## பணி போதாது

மண்ணின் மைந்தர்களை நினைவு கூரும் விதமாய் பல்வேறு சிறப்பம்சங்களையும் தாங்கியதாய் கடந்த ஒரு பேப்பர் வந்ததில் மகிழ்ச்சி.

மக்களைத் தொடர்ந்தும் போராட்டம் குறித்த சிந்தனையுடன் வைத்திருப்பதற்கு ஊடகங்கள் செய்யும் பணி போதாது என எண்ணுகிறேன்.

இக்கட்டான சூழ்நிலையில் ஊடகங்கள் இன்னும் காத்திரமாகப் பணியாற்ற வேண்டும் என்பது என் கருத்து

அந்தப் பணியை ஒரு பேப்பரும் செய்யுமா?

*- சிவநாயகி - ஸ்காபுறோ*

## தமிழர்கள் இல்லையா?

மாவீரர் தின நிகழ்வுகள் பல நாடுகளிலும் சிறப்பாக நடந்தேறியதில் மகிழ்ச்சியே. ஐக்கிய ராச்சியத்திலும் கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் பேர் கலந்து கொண்ட நினைவெழுச்சி நாள் சிறப்பாக நடந்தேறியது.

இதையிட்டு ஒரு புறம் மகிழ்ச்சியாயிருந்தாலும் கிட்டத்தட்ட 2 லட்சம் தமிழர்கள் வாழும் ஐக்கிய ராச்சியத்தில் மிகுதி முக்கால் வாசித் தமிழர்களுக்கும் என்ன நடந்தது? அவர்கள் தாயகத்துடனான தமது தொடர்புகளை முறித்துக் கொண்டு விட்டனரா? அல்லது தாம் இனியும் தமிழர்களாக வாழப் போவதில்லை என்று முடிவு செய்து விட்டார்களா?

எம் மக்களே இவ்வாறு தாயகம் குறித்த அக்கறையில்லாமல் இருக்கும் போது நாம் அஜித்தைக் குறை கூறி என்ன பயன்?

*- தியாகன், வெம்பிளி*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

# கொழும்புக் கடிதம்

வணக்கம் எல்லாரும் எப்படியிருக்கிறியள்?

உங்களோடை அரசியல் கதைக்கப்படாது எண்டு தான் ஒவ்வொரு முறை கடிதம் எழுதத் தொடங்கும் போதும் நினைக்கிறனான். ஆனால் சிங்களத்தின்ரை அரசியல் தானே இண்டைக்கு எங்கடை வாழ்க்கையையே சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்குது. அதாலை அந்த அரசியலை விட்டிட்டு வேறை ஒண்டையும் கதைக்க ஏலாமல் கிடக்குது.

இப்ப கொழும்பிலை அரசியல் வாதிகள் விடுற அறிக்கையை விட ஆமிக் கொமாண்டர், அதுதான் சரத் பொன்சேக்கா விடுற அறிக்கைகளை தான் அதிகமாக் கிடக்குது. கடைசியா தமிழக அரசியல் வாதிகளைக் கோமாளிகள் எண்டு சொல்லியிருக்கிறார்.

அதுக்குப் பிறகும் அட அந்தச் சிங்களத் தளபதி என்ரை அரசியல் எதிரியைத் தானே அப்படிச் சொன்னான் எண்டு நினைச்சோ என்னவோ முதலமைச்சரே பெரிசா ஒண்டும் செய்யாமல் இருக்கிறார் எண்டதை நினைக்கக் கவலையாக் கிடக்கு

அதோடை சரத் பொன்சேக்கா துள்ளுற துள்ளைப் பாக்க அவருக்கு அரசுக் கதிரை ஆசை வந்திட்டுதோ எண்ட சந்தேகமும் எட்டிப் பாக்குது.

இப்படித்தான் 70 களிலை பாகிஸ்தான பிரதமரா இருந்த சுல்பிகார் அலி பூட்டோ, சியா உல் ஹக் எண்டவரை இராணுவத் தளபதியாக்கி அழகு பாத்தவர்.

சியா உல் ஹக்கும் பாகிஸ்தானின்ரை எதிரி நாடான இந்தியாவைப் பற்றி அடிக்கடி அறிக்கை விடுறதும் எச்சரிக்கை செய்யிறதுமாக் கொஞ்சக் காலம் சத்தம் போட்டு பாகிஸ்தான் சனத்தின்ரை கவனத்துக்கு உரிய ஆளா வந்தாப் பிறகு தன்னைப் பதவியிலை இருத்தின சுல்பிகார் அலி பூட்டோவையே தூக்கிலை போட்டிட்டு இராணுவ ஆட்சியைக் கொண்டு வந்தவர். அந்த நிலமை மஹிந்தருக்கு வந்தாலும் ஆச்சரிப்படுறதுக்கில்லை.

போன மச்சான் திரும்பி வந்தான் கோவணத்தோடை எண்டொரு பழமொழி ஊரிலை சொல்லுறவை. யு.என்.பியிலை இருந்து மஹிந்தர் பக்கம் தாவி அமைச்சரா இருந்த கரு ஜெயசூரியாவும் இப்ப கோவணத்தோடை திரும்பி யு.என்.பிக்கே வந்திருக்கிறார்

ஐயோ மஹிந்தரின்ரை சகோதரங்கள் என்னை மனிசனாவே மதிக்க இல்லை எண்டு புலம்பிக் கொண்டு திரியிற கரு ஜெயசூரியாவைக் கட்சிக்குள்ளை சேத்து ரணில் தலையிடியைக் கூட்டிக் கொண்டிருக்கிறார்

சரி, இனி நடக்கப் போற கூத்துக்களை அடுத்தடுத்த பேப்பருகளிலை எழுதிறன்

*- கொழும்பான்*




Natural Herbal Medicine

GURUJI
S.L SAHADEVA RAJA (KANNAN)

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

நாடி பிடித்துப்பார்த்தல் இலவசம்

இந்தியாவில் 8 தலைமுறையாக வைத்தியம் செய்தவர்கள் இப்போது லண்டனில் ! சந்தர்ப்பத்தை தவற விடாதீர் !!

ஆஸ்த்மா, தோல்வியாதி, புற்றுநோய், நீரிழிவு, இரத்த அலர்ஜி, மாதவிடாய்ப் பிரச்சினை, குடற்புண், மூலநோய், முடி உதிர்தல், மூட்டு நோ, தலைவலி, பக்கவாதம், நரம்பியல், ஞாபகமறதி, தும்மல், அலர்ஜி, எக்சிமா, பயம் மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

Come and meet the Group Leader tribalAdivasi Herbal Medical practitioner and get relief from all kinds of diseases,illness diagnoised only by pulse reading,Giving wonderfull natural herbal treatment,Also Herbal Treatment for mor than 360 kinds diseases with out any side effects Asthma, Allergy, Diabetes, Arthritis (Join Pain), Fear, Memory Loss, Menstrual Problem, Ulcer, Dermatitis, All Type Piles, Kidney Stone, Cancer, Paralysis, Neuropathy, Nerous Weakness, Hair Fall, Ezema , Blood Allergy ,Headaches .



Evershine Dry Cleaner (Upstairs) 123 Mitcham Road, Tooting, London, SW17 9PE Near By Tesco
MOB: 07918 995 631 & 07529 400 523